DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No. 60/2021 |
| Police Station | Thiruppuvanam P.S |
| Deposition of Witness for | LW.2 /PW.2 |
| Name | செந்தில்குமார் |
| Husband's Name | வீரபத்திரன் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**A2, A3 Present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 24.02.2025 at **12**.10 a.m

**முதல் விசாரணை:**

எனது சொந்த ஊர் திருப்புவனம் புதூர் ஆகும். நான் தற்பொழுதும் திருப்புவனம் புதூரில் தான் வசித்து வருகிறேன். நான் கொத்தனாராக வேலை பார்த்து வருகிறேன் எதிரி ரிஷிக்குமார் என்பவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் விக்னேஸ்வரன் மற்றும் பாலையா ஆகியோரை எனக்கு தெரியாது. அ.சா.1 கனகவள்ளி எனது உடன் பிறந்த சகோதரி. கடந்த 09.04.2020 அன்று காலை 10.30 மணியளவில் நான் வைகை ஆற்றில் ரிஷிகுமார் என்பவருடன் கேரம்போர்டு விளையாடி தோற்றுவிட்டேன். ஆஜர் எதிரிகளில் இளஞ்சிவப்பு நிற சட்டை(விக்னேஷ்வரன்) அணிந்துள்ள எதிரி எனது கையை பின்னால் கட்டிவிட்டார். (சாட்சியிடம் இளஞ்சிவப்பு நிற சட்டை அணிந்துள்ள எதிரியின் பெயரை கேட்ட போது சாட்சி அவரது பெயர் தெரியவில்லை என்று கூறினார்) எதிரி ரிஷி என்பவர் என் தலையில் வீச்சு கத்தியால் வெட்டினார். எதிரி பாலையா எனது வயிற்றில் வெட்டினார். நான் உடனே சுயநினைவை இழந்துவிட்டேன். அதன் பிறகு என்ன

நடந்தது என்று எனக்கு தெரியாது. மருத்துவமனைக்கு சென்ற பிறகு தான் எனக்கு சுயநினைவு திரும்பியது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை இல்லை

சாட்சி திறந்த நீதிமனறத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

உதவி அமர்வு நீதிபதி

மானாமதுரை

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No. 60/2021 |
| Police Station | Thiruppuvanam P.S |
| Deposition of Witness for | LW.5 /PW.3 |
| Name | வீரபத்திரன் |
| Husband's Name | மாயாண்டி |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**A2, A3 Present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 24.02.2025 at **12**.20 a.m

**முதல் விசாரணை:**

எனது சொந்த ஊர் திருப்புவனம் புதூரில் வசிக்கிறேன். நான் விவசாய கூலி வேலை செய்துவருகிறேன். ஆஜர் எதிரிகளை நான் பார்த்ததில்லை. எனக்கு அவர்களை தெரியாது. எதிரி ரிஷிகுமாரை எனக்கு தெரியாது. எனது மகன் செந்தில்குமாரை வைகை ஆற்றுக்குள் யாரோ குத்திவிட்டு சென்றுவிட்டதாக எனது மைத்துனர் பரமகுரு மகன் பாக்கியராஜ் என்னிடம் கூறினார். நான் எனது மகள் கனகவள்ளி எனது மகன் பெரியசாமி அனைவரும் வைகை ஆற்றுக்கு சென்றபோது எனது மகன் செந்தில்குமார் பேச்சுமூச்சு இல்லாமல் கிடந்தான். எனது மகனுக்கு குடல் வெளியில் வந்திருந்தது. உச்சந்தலையில் வெட்டுக்காயம் இருந்தது. எனது மகன் உடம்பில் மொத்தம் 8 வெட்டுக்காயங்கள் இருந்தது. அதில் 3 காயங்கள் பெரிய காயங்கள். அதன்பிறகு நாங்கள் ஆட்டோ பிடித்து திருப்புவனம் காவல் நிலையம் சென்றுவிட்டு அங்கிருந்து திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி

வைத்தார்கள்.  போலீசார் என்னை விசாரிக்கவில்லை.  எனது மகனை விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை  இல்லை

சாட்சி திறந்த நீதிமனறத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

உதவி அமர்வு நீதிபதி

மானாமதுரை